தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

## 13 வயதுப்பிரிவு

(01.01.2008 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)

### வானுயரும் மாவீரம்

போர்ப்பறையின் ஒலிகேட்டு, மயிர்சிலிர்க்கப் போர்க்களம் விரைந்த பண்டைத் தமிழரின் வீரத்தை, நாம் அறிந்து வியந்திருக்கின்றோம். அதேபோல், எம் தாய்த்திருநாட்டின் மாவீரர்களையும் அவர்களின் தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் எண்ணிப் பார்க்கின்றோம்.

பல நூற்றாண்டு கால அடிமை வரலாற்றை வெறும் முப்பதாண்டுக்குள் மாற்றி எழுதிய மாபெரும் வீரர்கள் இவர்கள். காலம் உருவாக்கிய வீரர்கள், பின்பு காலத்தை உருவாக்கிய மாவீரர்கள். வீரத்தின் விளைநிலமாகத் தமிழீழத்தை அடையாளம் காட்டியவர்கள். எங்கள் இருப்பிற்காகத் தங்கள் சாவை விரும்பி ஏற்ற புனிதர்கள்.

அள்ளி அணைக்கவும் அன்பு செய்யவும் இவர்களுக்கும் பல உறவுகள் இருந்தன. ஆயினும், தாய்நாட்டின் விடுதலையே பெரிதென்று உரைத்து வழிகாட்டிச் சென்றவர்கள். தலைவர் மாமாவின் நேரிய வழிகாட்டலை ஏற்று, விடுதலைப் பாதையில் வீறுநடை போட்டவர்கள். புன்னகைத்தபடியே போர்க்களம் புக இவர்களால் மட்டுமே முடிந்தது. இவர்களின் பாதத் தடங்களில்தான் எம்மினம் விடுதலைக்கு வழி தேடுகின்றது.

விடுதலைப்பாதைக்கு வழிசமைத்துக் கொடுத்த வேவுப்புலிகள், அதன் தடைகளைத் தகர்க்கக் கரும்புலியானவர்கள், தரைப்புலிகள், கடற்புலிகள், வான்புலிகள் என்று வரலாறு படைத்தவர்கள், துணைப்படையினராய், எல்லைப்படையினராய்த் தோள்தாங்கியவர்கள், அறத்தின் வழிநின்று பசிவயிற்றில் போர்தொடுத்த தியாகச்செம்மல்கள். எண்ணிப்பார்க்கவே உடல்சிலிர்க்கும் உன்னதங்கள் இவர்கள். தலைவர் மாமாவிற்குத் துணைநின்ற தூண்கள். எம்மைக் காப்பதற்காய் காவலரண்களிலே கண் விழித்து வாழ்ந்திருந்தவர்கள்.

உலகம் வியக்கும் வெற்றிகளை எமக்கு ஈட்டித் தந்தவர்கள். ஈழத்தின் ஆதிக்குடிகளான எம்மை, அழித்துவிடலாம் எனக் கருதியவர்களுக்குத் தம் உயிர்க்கொடையால் பதிலிறுத்தவர்கள் எம் மாவீரர்கள். பெண், ஆண் என்கின்ற வேறுபாடு களைந்து, அனைவரும் ஒன்றாக நின்று, எரிமலையாகிப் பகை எரித்தவர்கள். காலத்தால் அழியாத வரலாற்றுப் பதிவை தங்கள் வீரத்தாலும் ஈகத்தாலும் எழுதியவர்கள்.

மாவீரர்களே! கல்லறைக்குள் வாழ்வதாய் எண்ணி உங்களை விதைத்த இடங்களையெல்லாம் பகைவர் சிதைத்து மகிழ்கிறார். நீங்கள் வாழ்வது எம் நெஞ்சறைக்குள் அல்லவா! விடுதலைவேண்டி விழிமூடிய உங்களின் கனவுகளை நாம் கண்களிற் சுமக்கின்றோம். மாவீரர் நாளென்பது நினைவுகளை மீட்கும் நாள் மட்டுமல்ல, புறம் படைத்த மாவீரர்களின் இலட்சியக் கனவுகள் மீது உறுதி எடுக்கும் நாள். வல்லமை தந்து நிற்கும் மாவீரரே! வையகம் உள்ளவரை வானுயர்ந்து நிற்கும் உங்கள் மாவீரம்!

நன்றி,
வணக்கம்.